முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2017 சனவரி

# (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2017-01-28
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும் விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினா* ***வினைச் சொல்லினைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பிரிவு A</u>

### நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள (15) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** நிறுவனமொன்றின் நிதித் தகவல்களைப் பயன்படுத்தும் கடன்கொடுத்தோன் ஒருவருக்கு பயனுடைய தாக உள்ளது எது?

(1) முதலீட்டின் மீதான வருமானத்தினைத் தெரிந்துகொள்ள

(2) கடன் கொடுப்பதற்கு முன்னர் போதுமான நிதி நிலைமை உள்ளதா எனத் தெரிந்துகொள்ள

(3) வரித் தேவைகளுக்காக வருமானத்தினைத் தெரிந்துகொள்ள

(4) ஊதிய அதிகரிப்பு, உபகாரக் கொடுப்பனவு மற்றும் சிறந்த வேலைப் புறநிலைகளை எதிர்பார்ப்பதற்கு

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றிலிருந்து வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து காசுப் பெறுவனவு, கணக்கீட்டு மூலகங்களில் கொண்டுள்ள சரியான தாக்கத்தினைத் தெரிவுசெய்க.

(1) சொத்துக்களில் அதிகரிப்பும் பரிப்புக்களில் வீழ்ச்சியும்

(2) சொத்துக்களில் வீழ்ச்சியும் பரிப்புக்களில் அதிகரிப்பும்

(3) சொத்துக்களில் வீழ்ச்சியும் மூலதனத்தில் வீழ்ச்சியும்

(4) சொத்துக்களில் மாற்றமில்லை (02 புள்ளிகள்)

**1.3** கொள்வனவுக் கட்டளை (Purchase Order) என்பது,

(1) நிறுவனமொன்று பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் தறுவாயில் பெற்ற பொருட்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படும் ஆவணம்

(2) களஞ்சியப் பிரிவினால் அதற்குத் தேவைப்படும் பொருட்களைப் பற்றித் தெரிவிக்க பயன்படும் ஆவணம்

(3) வாங்குநர் தமக்குத் தேவைப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் வகை, அளவு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையினைக் குறிப்பிட்டு விற்பவருக்கு வழங்கப்படும் ஆவணம்

(4) கட்டளையிடப்பட்ட பொருட்களுக்கு கொடுப்பனவைக் கோருவதற்கு வழங்குநரால் பயன்படுத் தப்படும் ஆவணம்

(02 புள்ளிகள்)

**1.4** கீழ்வருவனவற்றுள் எது பொதுத் தினக்குறிப்புப் பதிவேட்டில் (General Journal) **பதியப்படுவதில்லை**?

(1) வழுக்களின் திருத்தம் (2) ஆண்டிறுதிச் செம்மையாக்கங்கள்

(3) ஆரம்ப மீதிகளைப் பதிவுசெய்தல் (4) பொருட்களின் கடன் விற்பனை

(02 புள்ளிகள்)

**1.5** கீழ்வரும் தகவல்கள் தனியுரிமையாளர் வியாபாரமான **ABC என்ரபிரைசின்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| விபரம் | ரூ. |
|---|---|
| மூலதனம் - 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி | 200,000 |
| ஆண்டின்போது எடுப்பனவுகள் | 120,000 |
| 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் இலாபம் | 145,000 |
| 2016 மார்ச் 31 ஆந் திகதி பரிப்புக்கள் | 80,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2016 மார்ச் 31 ஆந் திகதி மொத்தச் சொத்துக்கள் :

(1) ரூ. 305,000/-. (2) ரூ. 545,000/-. (3) ரூ. 345,000/-. (4) ரூ. 225,000/-.

(02 புள்ளிகள்)

**1.6** கீழ்வருவனவற்றுள் எது ஒரு நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களினூடாக **பிறப்பிக்கப்படுவதில்லை**?

(1) நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய தகவல்

(2) நிறுவனத்தின் நிதித்தொழிற்பாடு பற்றிய தகவல்

(3) நிதிநிலை மாற்றங்கள் பற்றிய தகவல்

(4) நிறுவனக் கட்டமைப்பு மாற்றங்கள் பற்றிய தகவல் (02 புள்ளிகள்)

**1.7** **அமல் டிரேடர்ஸின்** 2017 சனவரி மாத முதல் வாரத்திற்கான சிற்றுக்காசு ஊடுசெயல்கள் பற்றிய கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| **திகதி** | **விபரம்** | **ரூ.** |
|---|---|---|
| சனவரி 01 | சிற்றுக்காசு மிதப்பு | 5,000 |
| சனவரி 03 | காகிதாதிகள் கொள்வனவு | 575 |
| சனவரி 05 | முத்திரைக் கொள்வனவு | 250 |
| சனவரி 06 | பிரயாணச் செலவுகள் | 450 |

2017 சனவரி 07 ஆந் திகதி சிற்றுக்காசு மீள்நிரப்பலாக சிற்றுக் காசாளர் பெறவேண்டிய தொகை :

(1) ரூ. 3,725/-. (2) ரூ. 5,000/-. (3) ரூ. 1,275/-. (4) ரூ. 6,275/-.

(02 புள்ளிகள்)

**1.8** **XYZ டிரேடர்ஸின்** கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| நிகரச் சொத்துக்கள் - 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி | 150,000 |
| மேலதிக மூலதனம் | 25,000 |
| நிகரச் சொத்துக்கள் - 2016 மார்ச் 31 ஆந் திகதி | 135,000 |
| ஆண்டின்போது உரிமையாளர் எடுப்பனவு | 12,000 |

**XYZ டிரேடர்ஸின்** 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் / (நட்டம்) :

(1) (ரூ. 22,000/-). (2) ரூ. 28,000/-. (3) ரூ. 52,000/-. (4) (ரூ. 28,000/-).

(02 புள்ளிகள்)

***1.9*** *முதல்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.9** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றில் பயன்படுத்தப்படும் முதன்மைக் கோப்பு களுக்கு (master files) இரண்டு (02) உதாரணங்கள் **கூறுக.** (02 புள்ளிகள்)

**1.10** அநேக கம்பனிகள் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைகளை நோக்கி நகருவதற்கான காரணங்கள் மூன்று (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

**1.11** மூலதனச் செலவினம் (Capital Expenditure) மற்றும் வருமானச் செலவினம் (Revenue Expenditure) ஆகியவற்றைச் சுருக்கமாக விபரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக. (03 புள்ளிகள்)

**1.12** நாட்குறிப்பு சான்றுறுதிச் சீட்டில் (Journal Voucher) உட்படுத்தப்பட வேண்டிய முக்கிய தகவல்கள் மூன்றினை (03) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

**1.13** கீழ்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் கூறுக. உமது விடைப் புத்தகத்தில் வினாக்களுக்கான ஆங்கில எழுத்துக்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி அவற்றுக்கு எதிரே சரி அல்லது தவறு என எழுதுக.

**(a)** நிதிசார் கணக்கீடு மற்றும் முகாமைக் கணக்கீடு இரண்டிற்குமே ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகம் (regulatory framework) உள்ளது.

**(b)** முகாமைக் கணக்கீட்டின் நோக்கம் வியாபாரத்தின் வினைத்திறன் மற்றும் விளைவுத்திறன் பற்றி தகவல் தருவதாகும்.

**(c)** நிதிக் கணக்கீட்டின் முக்கிய நோக்கம் நாட்டதாரரின் தகவற் தேவைகளை நிறைவு செய்வதாகும்.

**(d)** தேறுகைக் கோட்பாடானது (Realization Concept) தொக்குகளை கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியில் அளவிட வேண்டுமெனக் கூறும் கணக்கீட்டுக் கோட்பாடாகும். (04 புள்ளிகள்)

**1.14** கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் **சுனிமல் பேக்கரி** சம்பந்தப்பட்டதாகும். இந்த ஒவ்வொரு ஊடுசெயலையும் பதிவு செய்வதற்குத் தேவையான உரிய மூல ஆவணங்களை (source documents) **இனங்காண்க**

**(a)** **சில்வா அன்ட் சன்ஸ் கம்பனி**யிடமிருந்து கடனடிப்படையில் ரூ. 3,500/- க்கு மாத் தொக்குக் கொள்வனவு

**(b)** **"அகில டிரேடர்ஸ்"** க்கு கடன் அடிப்படையில் ரூ. 1,500/- க்கு பாண் விற்பனை

**(c)** காலாவதியானதன் காரணமாக ரூ. 1,000/- பெறுமதியான பாண்களை **அகில டிரேடர்ஸ்** திருப்பி அனுப்பியமை (03 புள்ளிகள்)

**1.15** தனியுரிமையாளர் வியாபாரமொன்றின் கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் இரட்டைப் பதிவுகளைக் **கூறுக** :

**(a)** அலுவலகப் பாவிப்புக்காக **வரையறுக்கப்பட்ட ஆன் கம்பனி**யிடமிருந்து கடன் அடிப்படையில் ரூ. 30,000/- பெறுமதியான தளபாடங்களை கொள்வனவு செய்தல்

**(b)** உரிமையாளர் தமது தனிப்பட்ட தேவைக்காக ரூ. 15,000/- பெறுமதியான (கிரயம்) பொருட்களை எடுத்துக்கொள்ளல்

**(c)** ரூ. 32,000/- க்கான கடன்கொடுத்தோர் விலைப்பட்டியலில் ரூ. 30,000/- செலுத்தி முற்றாகத் தீர்த்தல் (06 புள்ளிகள்)

பிரிவு *A* முடிவு

## பிரிவு B

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) 2016 யூன் மாதத்திற்கான கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் **மத்தியூ டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டனவாகும்.

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 2016.06.01 | ரூ. 40,000/- கிரயமான பொருட்கள் ரூ. 60,000/- க்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 2016.06.07 | மீள் விற்பனைக்காக ரூ. 50,000/- கிரயமான பொருட்கள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 2016.06.08 | கடனுக்குக் கொள்வனவு செய்த பொருட்களுக்காக அந்தக் கடன் கொடுத்தோனுக்கு ரூ. 10,000/- செலுத்தப்பட்டது. |
| 2016.06.24 | யூன் மாத ஊழியர் சம்பளம் ரூ. 45,000/- செலுத்தப்பட்டது. |
| 2016.06.30 | **மத்தியூ** மேலதிக மூலதனமாக ரூ. 90,000/- இனைப் பணமாக முதலீடு செய்தார். |
| 2016.06.30 | **வரையறுக்கப்பட்ட குரே கம்பனி**யிடமிருந்து அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ. 10,000/- க்கு அலுவலக உபகரணம் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது. |

***நீங்கள் செய்யவேண்டியது,***

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேற்படி ஊடுசெயல்களின் தாக்கங்களைப் பதிவு செய்க:

*[நிலையான சொத்துக்கள் + தொக்கு + கடன்பட்டோர் + காசு = மூலதனம் + பரிப்புக்கள்]*

(06 புள்ளிகள்)

(b) கீழ்வரும் கோட்பாடுகளை **விபரிக்குக** :

(i) அட்டுறு கோட்பாடு (Accrual concept)

(ii) உரிமக் கோட்பாடு (Entity concept) (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

2015 ஏப்ரல் 01 ஆந் திகதி **லஹிரு** ரூ. 450,000/- இனை பணமாக முதலீடு செய்து கடை ஒன்றினை ஆரம்பித்தார். 2016 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசேட்டுத் தொகுப்பு கீழ்வருமாறு :

**2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசேடு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| **லஹிரு** உள்ளிட்ட காசு | 450,000 | எடுப்பனவு | 250,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவு | 1,400,000 | கடன்கொடுத்தோருக்குக் கொடுப்பனவு | 900,000 |
| பெறப்பட்ட வங்கிக் கடன் | 600,000 | மின் கட்டணம் | 45,000 |
| | | வங்கிக் கடன் 6 மாதாந்தத் தவணைக் கட்டண மீள்கொடுப்பனவு (கடன் பெறுமதி மட்டும்) | 300,000 |
| | | வங்கிக் கடன் வட்டி | 15,000 |
| | | 2016 மார்ச் 31 இல் அலுவலக உபகரணக் கொள்வனவு | 180,000 |
| | | மீதி கி.கொ.செ. | 760,000 |
| | **2,450,000** | | **2,450,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) ரூ. 600,000/- வங்கிக் கடன் ஆண்டிற்கு 10% வட்டிக்கு (நிலையான வீதம்) 2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதி பெறப்பட்டது. இந்தக் கடன் 12 சமமான மாதாந்தத் தவணைக் கட்டணங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டியதாகும்.

(2) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் வருமதிகள் மற்றும் சென்மதிகள் :

| | ரூ. |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 250,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 100,000 |
| அட்டுறு மின் கட்டணம் | 15,000 |

(3) அலுவலக உபகரணம் மீதான தேய்மான வீதம் ஆண்டிற்கு 10 % ஆகும்.

(4) சகல விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் தொக்குகுள் எதுவும் இருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது,**

2016 மார்ச் 31 ஆந் திகதி **லஹிரு**வின் வியாபாரத்தின் பரீட்சை மீதியினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

2016 மார்ச் 31 ஆந் திகதி **ஷார்ப் டிரேடர்ஸின்** கணக்கீட்டு நிறைவேற்றுநரால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசமான ரூ. 197,000/- தொங்கற் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டது.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன :

(1) மின் கட்டணக் கொடுப்பனவு ரூ. 17,500/- தவறுதலாக காப்புறுதிச் செலவுக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டது. எனினும், காசேட்டில் இது சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(2) வியாபார உரிமையாளரினால் தமது பிரத்தியேகத் தேவைக்காக எடுக்கப்பட்ட ரூ. 175,000/- காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) பெறப்பட்ட கழிவு ரூ. 44,350/- உரிய பேரேட்டுக் கணக்கில் இரு தடவைகள் பதிவுசெய்யப்பட்டது.

(4) வாடகை வருமானம் ரூ. 55,000/- வாடகைச் செலவுக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டபோதிலும் காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(5) சோலைவரிக் கொடுப்பனவு ரூ. 12,000/- காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்ட போதிலும், தவறுதலாக பெற்ற கழிவுக் கணக்கில் ரூ. 120,000/- எனச் செலவுப்பதிவு செய்யப்பட்டது.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

கீழ்வருவனவற்றைக் **தயாரிக்குக** :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**ஹண்டி பாக் டிரேடர்ஸ்** கைப் பைகளை உற்பத்தி செய்யும் ஒரு தனியுரிமையாளர் வியாபாரமாகும். கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2016 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான **ஹண்டி பாக் டிரேடர்ஸ்** தொடர்புபட்டவை:

| | **ரூ.** |
|---|---:|
| 2016 ஏப்ரல் 01 இல் தொக்குகள் : | |
| மூலப்பொருட்கள் | 1,350,000 |
| புத்துருவாகும் வேலை – முதன்மைக் கிரயத்தில் | 725,000 |
| மூலப்பொருட் கொள்வனவு | 2,070,000 |
| உள்வண்டிக் கூலி – மூலப்பொருட்கள் | 250,000 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 1,230,000 |
| மின்சாரச் செலவுகள் | 280,000 |
| நீர்க் கட்டணம் | 80,000 |
| ஏனைய நேர்ச் செலவுகள் | 855,000 |
| தேய்மானம் : | |
| கட்டடம் | 240,000 |
| தொழிற்சாலை எந்திரம் | 765,000 |
| 2016 யூன் 30 இல் தொக்குகள் : | |
| மூலப்பொருட்கள் | 1,245,000 |
| புத்துருவாகும் வேலை – முதன்மைக் கிரயத்தில் | 1,050,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) நேர் கூலிகள் உற்பத்தி செய்யப்படும் கைப் பை ஒன்றிற்கு ரூ. 150/- வீதம் உற்பத்தி செய்யப்படும் கைப் பைகளின் எண்ணிக்கை அடிப்படையில் செலுத்தப்படும். இந்தக் காலாண்டில் உற்பத்தி செய்த கைப் பைகளின் எண்ணிக்கை 6,000.

(2) மின்சாரச் செலவு, நீர்க் கட்டணம் மற்றும் கட்டடத் தேய்மானம் ஆகியவற்றின் 25 % அலுவலகத்திற்கு ஒதுக்கப்படல் வேண்டும்.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(a) 2016 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான **ஹன்டி பாக் டிரெடர்ஸின்** உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) ஒரு கைப் பையின் உற்பத்திக் கிரயத்தினைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பிரிவு *B* முடிவு

## பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள ஒரே வினாவுக்கு விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**ரசிகவை** தனி உரிமையாளராகக் கொண்ட **ரசிக டிரேடிங்கின்** 2016 மார்ச் 31 ஆந் திகதியில் பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

**ரசிக டிரேடிங்**

**2016 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | | |
| காணியும் கட்டடமும் (காணி - ரூ. 5,500,000/-) | 25,500 | |
| விநியோக வாகனம் | 4,400 | |
| அலுவலக உபகரணம் | 2,750 | |
| 2015 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் | | |
| கட்டடம் | | 5,000 |
| விநியோக வாகனம் | | 1,440 |
| அலுவலக உபகரணம் | | 540 |
| 2015 ஏப்ரல் 01 இல் தொக்குகள் | 3,850 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 6,500 | 7,600 |
| 2015 ஏப்ரல் 01 இல் ஐயுறவுக்கடன் ஏற்பாடு | | 620 |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 15,000 | 35,500 |
| எடுப்பனவுகள் | 1,200 | |
| சம்பளமும் கூலிகளும் | 6,500 | |
| காப்புறுதி | 1,830 | |
| மின்சாரம் | 3,800 | |
| விற்பனைப் பணிசை (தரகு) | 2,150 | |
| 14% வங்கிக் கடன் | | 9,500 |
| காசுக் கையிருப்பு | 2,620 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 1,900 |
| 2015 ஏப்ரல் 01 இல் மூலதனம் | | 14,000 |
| | **76,100** | **76,100** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு ரூ. 3,450,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(2) **கங்கா டிஸ்ரிபியூட்டர்ஸ்** இடமிருந்து வருமதியாகவுள்ள ரூ. 150,000/- அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட வேண்டியதுடன், ஐயுறவுக் கடனுக்கான பொதுவான ஏற்பாடு ஆண்டின் இறுதியில் நிலுவையாகவுள்ள வியாபார வருமதிகள் மீதியின் 2 % ஆக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(3) வியாபாரத்தின் கொள்கை கிரயத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்வதாகும் :

| | |
|---|---|
| கட்டடம் | 5% |
| விந்யோக வான் | 20% |
| அலுவலக உபகரணம் | 12% |

(4) 2016 மார்ச் மாதத்திற்கான மின் கட்டணம் ரூ. 355,000/- 2016 மார்ச் 31 ஆந் திகதி வரை செலுத்தப் படவில்லை.

(5) வங்கிக் கடன் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி பெறப்பட்டது. இது இரு சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டும். 2016 மார்ச் 31 ஆந் திகதியில் செலுத்தப்பட வேண்டிய முதலாவது தவணைக் கட்டணமும் வட்டியும் 2016 ஏப்ரல் 10 ஆந் திகதி செலுத்தப்பட்டது.

(6) அடுத்த நிதியாண்டு 2016/17 க்கான காப்புறுதிக் கட்டணச் செலவு ரூ.530,000/- செலுத்தப்பட்டுள்ளது.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதி நிதிநிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

——— பிரிவு *C* முடிவு ———

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |